# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஜனவரி 2008 மலர் 3 இதழ் 4

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



*அனைவருக்கும் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்!*

## இயற்கை வளங்களை மேலாண்மை செய்வதற்கான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் குறித்த பயிற்சி முகாம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் “இயற்கை வளங்களை மேலாண்மை செய்வதற்கான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள்” என்ற தலைப்பில் பயிற்சி முகாம் ஒன்றை நவம்பர் 26 - 28ஆம் தேதிகளில் சென்னையில் நடத்தியது. இந்தப் பயிற்சி முகாம் காம்பாஸ் (COMPAS) மற்றும் ஹிவாஸ் (HIVOS) நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப் பட்டது. உயிரிப் பல்வகைமை சட்டம், பயிர் ரகங்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் விவசாயிகள் உரிமை சட்டம் மற்றும் திருத்தி அமைக்கப்பட்ட புதிய விதை சட்டம் போன்ற சட்டங்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்களைப் புரிந்துகொள்வதே இந்தப் பயிற்சி முகாமின் முக்கிய நோக்கமாகும். பயிற்சி முகாமின் முதல் மற்றும் மூன்றாவது நாள் நிகழ்ச்சிகள் சென்னையில் உள்ள ரமதா ராஜ்பார்க் ஹோட்டலில் நடைபெற்றன. இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள் அனைத்தும் சுக்கன்கொல்லையிலுள்ள இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப ஆதார மையத்தில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி முகாமில் தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்த பத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இரண்டு வழிக்கறிஞர்கள், ஐந்து சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் நான்கு தாவர உயிரியல் மற்றும் உயிரித் தொழிற்நுட்பவியல் மாணவர்கள் கலந்து கொண்டனர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு சட்டங்களைக் குறித்த விரிவான விளக்கங்களைக் குறிப்பிட்ட துறைகளைச் சேர்ந்த வல்லுனர்கள் அளித்தனர். இந்தப் பயிற்சி முகாமின் தொடர்ச்சி 2008ஆம் ஆண்டில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வருங்காலத்தில் நடத்தப்படும் பயிற்சிகள் தமிழ் மற்றும் கன்னட மொழிகளில், அந்தந்தப் பகுதிகளில் உள்ள களப்பணியாளர்கள், விவசாயிகள் மற்றும் வைத்தியர்களுக்கு நடத்தப்படும்.




*பயிற்சி முகாமில் டாக்டர் சுமன் சஹாய்*

### புதிய திட்டம்

**விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான இயற்கைவழி காய்கறிச் சாகுபடி திட்டம்**

மும்பையில் உள்ள ஸ்ரீ ரத்தன் டாடா டிரஸ்ட் “விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான இயற்கைவழி காய்கறிச் சாகுபடி” என்னும் திட்டத்தை நமது மையத்திற்கு வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் நவம்பர் 2007 முதல், திண்டுக்கல் மாவட்டத்தில் பாசன வசதியுடைய பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கான கால வரையறை ஒரு வருடமாகும்.



# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மைத் திட்டம் - II**

இந்தத் திட்டத்தை ஃபோர்ட் நிறுவனத்தின் உதவியுடன் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்காக காஞ்சிபுரம், திருவண்ணாமலை. நாகப்பட்டினம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலிருந்து சுமார் 227.78 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பருவத்தில், சுமார் 147.11 ஹெக்டேர் நிலத்தில் இயற்கைவழி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு சுமார் 25 களப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு "சட்ட விழிப்புணர்வு" என்ற தலைப்பில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சிகளை பெங்களூரிலுள்ள இந்தியத் தேசிய சட்டக் கல்லூரி (National Law School of India) மாணவர்கள் செல்வி. பி. பூங்குழலி மற்றும் திரு. கௌதம் ஆகியோர் நடத்தினர். அக்டோபர் 16 மற்றும் 24, நவம்பர் 17 மற்றும் டிசம்பர் 29ஆம் தேதிகளில், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் கொம்புப்பள்ளம் கிராமத்திலுள்ள இயற்கை பண்ணைக்கும், உப்புப்பள்ளம் கிராமத்திலுள்ள மண்புழு தயாரிப்பகத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். பெங்களூரிலுள்ள ஐ.எம்.ஓ. நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அஜித்குமார் அவர்களும், திரு. கிரண் அவர்களும் அக்டோபர் 2-7ஆம்தேதிகளில்,காஞ்சிபுரம்,திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளின் வயல்களில் புற ஆய்வை மேற்கொண்டனர். அக்டோபர் 26 மற்றும் டிசம்பர் 18ஆம் தேதிகளில், நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு அகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு குறித்து இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, திண்டுகல்லில் உள்ள சிம்கோட்ஸ் (SIMCODESS) தொண்டு நிறுவனத்திற்கு, இயற்கை வேளாண் தொழிற்நுட்பங்கள் குறித்து நான்கு பயிற்சிகள் டிசம்பர் 10, 11, 14 மற்றும் 15ஆம் தேதிகளில் நடத்தப்பட்டன.

**சுனாமியால் பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீரமைக்கும் திட்டம் - II**

இந்தத் திட்டத்தை, "தி வெட்லேண்ட்ஸ் இன்டர்நேஷனல் சவுத் ஏஷியா" என்ற நிறுவனத்தின் உதவியுடன் நமது மையம் ஜூலை 2007 முதல் சீர்காழியில் செயல்படுத்தி வருகிறது. சென்னையிலுள்ள கிரீன்கோஸ்ட் நிறுவனத்தின் திட்ட உதவியாளர் திரு. செந்தில் குமார் அவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கலந்துரையாடுவதற்காக நமது சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தார். அக்டோபர் 30ஆம் தேதியன்று, "இயற்கைவழி நெல் சாகுபடி" என்ற தலைப்பில் தர்காஸ் மற்றும் புதுப்பட்டினம் கிராமப் பயனீட்டாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. உதயநிலா இயற்கை விவசாயிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் சுமார் 19 பேர், அக்டோபர் 30ஆம் தேதியன்று, சுக்கன்கொல்லையிலுள்ள ஆய்வுப் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நவம்பர் 24 மற்றும் 29ஆம் தேதிகளில், குமரகுடி மற்றும் வணகிரி கிராமப் பயனீட்டாளர்களுக்கு இயற்கைவழி நெல் சாகுபடி குறித்த இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ், இயற்கை வேளாண் தொழிற்நுட்பங்களைப் பின்பற்றும் விவசாயிகளைப் பற்றிய விவரச் சேகரிப்பு சீர்காழியிலுள்ள மூன்று கிராமங்களில் நடத்தப்பட்டது.

**உணவுக்கு உத்திரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மைத் திட்டம்**

புதுதில்லியிலுள்ள கபார்ட் (CAPART) நிறுவனத்தின் உதவியுடன் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பத்து கிராமங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு நெல் விதைகள், காய்கறி விதைகள் மற்றும் இயற்கை இடுபொருட்கள் போன்றவை வழங்கப்பட்டன. இயற்கைவழி நெல் சாகுபடியில் சுமார் 64 விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பாரம்பரிய நெல் ரகங்களின் விதை உற்பத்தியில் ஐந்து விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். நவம்பர் 30ஆம் தேதியன்று, தண்டரைப்புதுச்சேரி கிராம விவசாயிகளுக்கு இயற்கைவழி வேளாண்மை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

**நெற்பயிர் சாகுபடி - விதை முதல் சந்தை வரை**

பெங்களூரிலுள்ள ஹீவாஸ் (HIVOS) நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக சித்திரவாடி, கலியப்பேட்டை மற்றும் கொளத்தாஞ்சேரி கிராமங்களில் பல்வேறு பயிர் ரகங்கள் இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. நெற்பயிரில் காணப்படும் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் வேப்ப விதை கரைசலைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தப்பட்டது. கொளத்தாஞ்சேரி மற்றும் ஈசூர் கிராம இயற்கை விவசாயிகளின் வயல்களில் புற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. டிசம்பர் 18 - 20 ஆம் தேதிகளில், சித்திரவாடி, கொளத்தாஞ்சேரி, கலியப்பேட்டை மற்றும் ஈசூர் கிராம விவசாயிகளுக்குக் கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில், தற்சார்பு இயற்கை வேளாண் தொழிற்நுட்பங்கள், இயற்கைவழி வேளாண்மையின் கீழ் உள்ள நிலங்களை அதிகரித்தல் மற்றும் இயற்கைவழி வேளாண்மைக்கும் ரசாயன முறை வேளாண்மைக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

**காய்கறிகளில் விருட்சாயுர்வேதப் பரிசோதனை**

அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறையின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தக்காளிக்கான இயற்கை சாகுபடி தொழிற்நுட்பங்களை நிர்ணயிப்பதற்காக, PKM-1 ரகத் தக்காளி நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. சுய உதவிக்குழு உறுப்பினர்களுடன் இணைந்து அல்லிவிளாகம் கிராமத்தில் தாவரக்கரைசல் தயாரிப்பகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இயற்கைவழி காய்கறிச் சாகுபடி என்ற தலைப்பில் ஆணைகாரன் சத்திரம், நாதல்படுகை மற்றும் சாந்தப்படுகை கிராம விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது.

**தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டம்**

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறையின் உதவியுடன் தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டத்தை சீர்காழியில் செப்டம்பர் 2005 முதல் செயல்படுத்தி வருகிறது. ஆய்வகத்தில், வேப்ப எண்ணெய் சோப்பு கரைசலைப் பயன்படுத்தி அசுவுணிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெல்லில் காணப்படும் இலைச் சுருட்டுப் புழுக்களின் தாக்குதலை பூண்டு *அர்க்கம்* மற்றும் பூண்டு கரைசலைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துவதற்கான ஆய்வுகள் முடிக்கப்பட்டு விட்டன. அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

துறையின் கண்காணிப்புக் குழு கூட்டம் புவனேஸ்வரத்தில் உள்ள கே.ஐ.ஐ.டி. பல்கலைக் கழகத்தில் (KIIT University) நடைபெற்றது. நமது மையத்தின் சார்பாக, சுபாஷிணி ஸ்ரீதர் மற்றும் பி. கிருத்திகா ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறையின் உதவியுடன் நமது மையத்தினால் செயல்படுத்தப்படும் தாவரக்கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்கள். நவம்பர் 15 மற்றும் டிசம்பர் 11ஆம் தேதிகளில், தாவரக் கரைசல் தயாரிப்பு முறைகள் மற்றும் மண்புழு உர உற்பத்தி முறைகள் குறித்து இரண்டு பயிற்சிகள் முறையே பழையகரம் மற்றும் பூம்புகார் கிராமப் பெண் விவசாயிகளுக்கும், காட்டூர் மற்றும் புலியந்துறை கிராம விவசாயிகளுக்கும் நடத்தப்பட்டன.

**காம்பாஸ் திட்டம் - II**

இந்தத் திட்டம் காம்பாஸ் நிறுவனத்தின் உதவியுடன் காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மே 2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் நோயியல் துறையில், தக்காளியில் *வசம்பு* பொடி மற்றும் பசும்பாலைப் பயன்படுத்தி விதை நேர்த்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நமது திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் பரவி காணப்படக்கூடிய பாரம்பரிய விதைகளைப் பற்றிய விவரச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில், இயற்கைவழி வேளாண்மையை மேற்கொள்ளும் விவசாயிகளைப் பற்றியும், அவர்கள் பின்பற்றும் இயற்கை வேளாண் தொழிற்நுட்பங்களைப் பற்றியும் தகவல் சேகரிப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. நவம்பர் 2 & 3 மற்றும் டிசம்பர் 16 & 17ஆம் தேதிகளில், தீவனப்பயிர் சாகுபடி குறித்து மோகல்வாடி, குறிப்பேடு, கடம்பை, சாத்தப்பூண்டி மற்றும் கயநல்லூர் கிராம விவசாயிகளுக்கு நான்கு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

**தொழில்நுட்ப ஆதார மையத்தின் செயல் பாடுகள்**

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் தொழிற்நுட்ப ஆதார மையம் (Technology Resource Centre) அக்டோபர் 2005 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இயற்கைவழி வேளாண்மைத் தொழில் நுட்பங்கள் திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள விவசாயிகள் பல்வேறு இயற்கை வேளாண் தொழிற்நுட்பங்களைச் செயல்படுத்தி வருகின்றனர்.

**நெதர்லாந்து பயணம்**

காம்பாஸ் திட்டத்தின் சர்வதேச மேலாண்மை குழு கூட்டம் நெதர்லாந்திலுள்ள இடிசி தலைமையகத்தில் செப்டம்பர் 30ஆம் தேதி முதல் அக்டோபர் 7ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டார். இதில், காம்பாஸ் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து, திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளின் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும், சர்வதேச ஒருங்கிணைப்பாளர்களும் கலந்துரையாடினர். இதைத் தொடர்ந்து, ஆ.வே. பாலசுப்பிர மணியன் அவர்கள் நெதர்லாந்தில் ஹேக் (Hague) பகுதியிலுள்ள ஹிவாஸ் நிறுவனத்தின் தலைமையகத்திற்குச் சென்று, அங்குள்ள அலுவலர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

**இயற்கை வேளாண் சான்றிதழ் குறித்த பயிற்சி**

இயற்கை வேளாண்மைச் சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த இரண்டு பயிற்சி முகாம்கள் முறையே அக்டோபர் 27 மற்றும் நவம்பர் 24ஆம் தேதிகளில் சுக்கன்கொல்லையில் உள்ள தொழிற்நுட்ப ஆதார மையத்தில் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சி முகாம்களில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த நபர்கள் கலந்து கொண்டனர். இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ். ஆறுமுகசாமி அவர்கள் இந்தப் பயிற்சிகளை நடத்தினார். இதில், இயற்கை வேளாண்மைச் சான்றிதழ் பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகள் குறித்து விளக்கப்பட்டன. பயிற்சியின் முடிவில், பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு இயற்கை வேளாண் சான்று பெற்ற நமது சுக்கன்கொல்லை ஆய்வுப் பண்ணை சுற்றி காண்பிக்கப்பட்டது.

**பெங்களூரில் நடைபெற்ற கருத்தரங்கு**

பெங்களூரிலுள்ள எப்.ஆர்.எல்.எச்.டி. (FRLHT) நிறுவனம் "சமூகப் பாரம்பரிய முறைகள் - பயன்பாடும், வளர்ச்சியும்" என்ற தலைப்பில் கலந்துரையாடல் மற்றும் கண்காட்சி முகாம் ஒன்றை, அக்டோபர் 31ஆம் தேதியன்று நடத்தியது. இந்த நிகழ்ச்சியில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு "தற்சார்பு வேளாண்மைக்கான பாரம்பரியச் செயல்முறைகள்" என்ற தலைப்பில் உரையாற்றினார். நமது மையத்தின் சீர்காழி அலுவலகப் பணியாளர்கள் பி.ஷோபனா, பாத்திமா மற்றும் ஆரோக்கிய ஜெயா ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, நமது மையத்தினால் தயாரிக்கப்பட்ட தாவரக்கரைசல்களையும் நமது மையத்தின் வெளியீடுகளையும் பார்வைக்கு வைத்தனர். விற்பனை மேலாளர் எம். சுரேஷ் அவர்கள் நமது மையத்தினால் விற்பனை செய்யப்படும் இயற்கை விளைபொருட்களைப் பார்வைக்கு வைத்தார்.

**ஒரிசா பயணம்**

நவம்பர் 16ஆம் தேதியன்று, சுபாஷிணி ஸ்ரீதர் மற்றும் பி. கிருத்திகா ஆகியோர் ஒரிசாவிலுள்ள மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (CRRI) சென்றிருந்தனர். அங்கு அவர்கள், ஒருங்கிணைந்த சாகுபடி நுட்பங்கள் பற்றியும் பல்வேறு நெல் ரகங்களின் முக்கியத்துவம் பற்றியும் அறிந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து, ஆராய்ச்சி மையத்தின் வேளாண் பொறியியல் துறைக்குச் சென்று நெற்பயிர் சாகுபடிக்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு உபகரணங்களைப் பார்வையிட்டனர்.

**வேளாண் கண்காட்சிகளில் சி.ஐ.கே.எஸ்.**

நவம்பர் 22ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை கோயம்புத்தூரில் நடைபெற்ற வேளாண் கண்காட்சியில் (Agri Intex Fair) இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் பங்கு பெற்றது. இதை தொடர்ந்து, பெங்களூரிலுள்ள ஐசிசிஓஏ (ICCOA) நிறுவனம், டெல்லியில் நடத்திய "இயற்கைவழி இந்தியா 2007" என்ற கண்காட்சியிலும் கலந்து கொண்டது. இந்தக் கண்காட்சியில், நமது மையத்தின் வெளியீடுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டன. இந்தக் கண்காட்சியில் எம். சுரேஷ், பி. முருகன், எச். கணேஷ் மற்றும் நமது திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களைச் சேர்ந்த எட்டு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

உங்கள் கருத்துக்கள்
மற்றும் விமர்சனங்களை
info@ciks.org என்ற
மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்

## புத்தகங்களும் வீடியோ படங்களும்

### இயற்கை வேளாண்மையில் தாவரக்கரைசல்கள் (ஆங்கிலம்)




இந்தப் புத்தகத்தில் இயற்கைவழி வேளாண்மையில் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் தாவரக்கரைசல்களைப் பற்றியும், அவற்றைத் தயாரிக்கும் முறைகள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தத் தாவரக்கரைசல்களைப் பயன்படுத்தும் முறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

**விலை : ரூ. 25/-**

### இயற்கை வேளாண்மையில் மண்வள மேம்பாடு (ஆங்கிலம்)




இந்தப் புத்தகத்தில், இயற்கை உரங்களான தொழுவுரம், பசுந்தாள் உரம் போன்றவற்றைப் பயன்படுத்தி மண்வளத்தை மேம்படுத்தும் முறைகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், மக்கு உரத் தயாரிப்பின் பல்வேறு முறைகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

**விலை : ரூ. 25/-**

இந்தப் புத்தகங்களைப் பெற விரும்புவோர் புத்தகத்தின் விலையுடன் 30% தபால் செலவையும் சேர்த்து சென்னையில் மாற்றத்தக்க பணவிடை (M.O.) அல்லது வரைவோலையை (D.D.) இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் (Centre for Indian Knowledge Systems) என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும். புத்தகத்தின் பெயர் மற்றும் தேவைப்படும் எண்ணிக்கையைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

## வருகையாளர் பதிவேடு

- *அக்டோபர் 9ஆம் தேதியன்று, காந்திகிராம் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடைப் பராமரிப்பு துறையின் பேராசிரியர் டாக்டர் டி.டி. ரங்கநாதன் அவர்கள் வந்திருந்தார்.*
- *அக்டோபர் 11ஆம் தேதியன்று, இ.டி.சி. இந்தியா (ETC India) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. எச். லாண்டிங் அவர்கள் வந்திருந்தார்.*
- *நவம்பர் 5ஆம் தேதியன்று, திரு. பிரிங்ஸ்டோன் காரு அவர்களின் தலைமையில் ஐந்து பேர் அடங்கிய நாட்டு வைத்தியர்கள் குழு மேகாலயாவிலிருந்து வந்திருந்தனர். இவர்களுடன் எப்.ஆர்.எல்.எச்.டி. நிறுவனத்தைச் சேர்ந்த திரு. எம்.பி. ஜார்ஜ் அவர்களும் வந்திருந்தார்.*
- *நவம்பர் 16ஆம் தேதியன்று, சென்னைக்கு அருகிலுள்ள கொடிவல்லியிலுள்ள உணவு மற்றும் பால்பொருள் தொழில்நுட்ப மையத்திலிருந்து (Institute of Food and Dairy Technology) டாக்டர். ராமசாமி அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *நவம்பர் 19ஆம் தேதியன்று, ஒரிசாவிலுள்ள கிராம் ஸ்வராஜ் அமைப்பின் செயலாளர் திரு. தீபக் பானி அவர்கள் வந்திருந்தார்.*
- *டிசம்பர் 6ஆம் தேதியன்று, டென்மார்க்கில் உள்ள இயற்கைவழி உணவு மற்றும் வேளாண்மைக்கான டேனிஷ் ஆய்வு மையத்தின் (Danish Research Centre for Organic Food and Farming) ஆய்வாளர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் வந்திருந்தார்.*
- *டிசம்பர் 7ஆம் தேதியன்று, சேலத்தில் உள்ள ராசி விதைகள் நிறுவனத்தின் பயிர் ஆராய்ச்சி துறையின் துணை தலைவர் டாக்டர் எஸ். ராமநாதன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *டிசம்பர் 8ஆம் தேதியன்று, தர்மபுரி மாவட்டத்திலுள்ள டிரைபல் ஹெல்த் இனிஸியேட்டிவ் (Tribal Health Initiative) நிறுவனத்திலிருந்து 19 விவசாயிகள் அடங்கிய குழு ஒன்று சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வு பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *டிசம்பர் 18ஆம் தேதியன்று, மேற்கு வங்காளத்திலுள்ள விவேகானந்தர் உயிரித் தொழிற்நுட்பவியல் மையத்திலிருந்து டாக்டர் பி.கே. தத்தா அவர்களும் டாக்டர் ராமலஷ்மி தத்தா அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*
- *டிசம்பர் 26ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள சோலையில் சஞ்சீவனம் நிறுவனத்திலிருந்து திருமதி சசிகலா அவர்களும் திரு. அண்ணாமலை அவர்களும் நமது சுக்கன்கொல்லைப் பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *டிசம்பர் 31ஆம் தேதியன்று, பங்களாதேஷிலுள்ள வேளாண் ஆலோசனை சங்கத்தைச் (Agricultural Advisory Society) சேர்ந்த திரு. எம்.டி. ஹாருன்-அர்-ரஷித் அவர்கள் வந்திருந்தார்.*

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி, து. து. நிர்மலா தேவி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862

மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**